# MODUL INTERVENSI MENENGAH ATAS 2026

## PEPERIKSAAN PERCUBAAN SPM

## TINGKATAN 5

**BAHASA TAMIL** **6354/2**
**KERTAS 2**
**JULAI 2026**
**2 JAM 15 MINIT**

---

**JANGAN BUKA KERTAS SOALAN INI SEHINGGA DIBERITAHU**

1. *Kertas peperiksaan ini mengandungi* **empat** *bahagian:* **Bahagian A, Bahagian B, Bahagian C** *dan* **Bahagian D.**
2. *Jawapan hendaklah ditulis di dalam buku jawapan yang disediakan.*
3. **Kertas peperiksaan** *dan* **buku jawapan** *hendaklah serahkan pada akhir peperiksaan.*

AEB3041

**NAMA** :______________________________

**TINGKATAN** :______________________________

Kertas peperiksaan ini mengandungi **14** halaman bercetak.



Dimuat turun oleh: AEB3041 pada 7/10/2026, 9:25:48 AM

**பிரிவு அ : கருத்துணர்தல் (பல்வகை)**

[30 **புள்ளி**]

1 கீழ்க்காணும் கருத்துப்படம் உணர்த்தும் **கருத்து** யாது?




[2 *புள்ளி*]



Dimuat turun oleh: AEB3041 pada 7/10/2026, 9:25:48 AM

2 கீழ்க்காணும் அறிவிப்பின் **முக்கியக் கருத்து** யாது?




[2 *புள்ளி*]

3 கீழ்க்காணும் பாடல்வரிகள் உணர்த்தும் **படிப்பினை** யாது?

AEB3041

**வாழ நினைத்தால் வாழலாம்**
**வழியா இல்லை பூமியில்**

**ஆழக் கடலும் சோலையாகும்,**

**ஆசை இருந்தால் நீந்தி வா!**

**- கவியரசு கண்ணதாசன்**

[2 *புள்ளி*]



Dimuat turun oleh: AEB3041 pada 7/10/2026, 9:25:48 AM

4 கீழ்க்காணும் நகைச்சுவைத் துணுக்கில் ஆசிரியரின் கூற்று உணர்த்தும் **உட்கருத்து** யாது?



ஆசிரியர் : மாணவர்களே! நீங்கள் மதிநுட்பத்தைப் பெற விவேகானந்தரின் கூற்றுப்படி எந்நேரமும் பசித்திருக்க வேண்டும்.

மாணவர்கள் : ஆமாம் ஐயா, அதனால்தான் நான் பசிக்கும் போதெல்லாம் சாப்பிடுவேன்.

[2 *புள்ளி*]

5 பாஷினி சிவகுமாரிடம் காணப்படும் இரண்டு **பண்புகள்** யாவை?

**கலைஞர் பாஷினி சிவகுமார்**

உள்ளூர் தமிழ் கலைஞரான பாஷினி சிவகுமார் 2018 ஆம் ஆண்டு வெளியான "வெடிகுண்டு பசங்க" மலேசியத் திரைப்படத்தின் மூலம் கலைத்துறையில் அறிமுகமானார். "கல்யாணம் 2 காதல்" தொடரின் மூலம் புகழ் பெற்ற இவர், 2022 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆஸ்ட்ரோ உலகம் விருதுகள் நிகழ்வில் 'பிரபலமான சிறந்த கதாநாயகி' என்ற விருதைப் பெற்றார். கதாப்பாத்திரங்களை உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்தும் ஆற்றல் இவருக்குத் தனித்துவமான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்கிறது. அயரா உழைப்பும் சாதிக்க வேண்டும் என்ற எண்ணமும் வெற்றியின் திறவுகோலாகக் கொண்டு இன்று யோகா பயிற்றுநராகவும் இருந்து வருகிறார். மேலும், 2025 ஆம் ஆண்டு இவர் உருவாக்கிய "செரும்புன்" ஹரி ராயா வாழ்த்துக் காணொளி ஒரே நாளில் பத்து இலட்சத்திற்கும் அதிகமான பார்வைகளைப் பெற்றது. இதனால், சமூகப் பொறுப்புணர்வும் கலைத்திறனும் மிக்க கலைஞராகப் பாஷினி சிவகுமார் பாராட்டப்பட்டு வருகிறார்.

AEB3041

[2 *புள்ளி*]



Dimuat turun oleh: AEB3041 pada 7/10/2026, 9:25:48 AM

6 மலேசியாவின் இளம் சாதனையாளரான செல்வி தேவிஷா விக்னேஷ்வரனின் **சாதனைகள்** இரண்டனை எழுதுக

**செல்வி தேவிஷா விக்னேஷ்வரன்**

மலேசியாவில் இளம் சாதனையாளர்களின் வளர்ச்சி வியக்கும் நிலையில் இருந்துவரும் நிலையில், குழந்தைகளின் சாதனை வியப்பிலும் பெரும் வியப்பில் நம்மை ஆழ்த்துகிறது. டத்தோ விக்னேஷ்வரன் இராமசாமி டத்தின் ஷாமளா முனியாண்டி தம்பதியருக்குப் பிறந்த தேவிஷா தனது 4 வயதிலேயே 5 உலகச் சாதனையைப் புரிந்து நாட்டின் இளம் சாதனையாளராக வலம் வருகிறார். 2023இல் 51 ஆசிய நாடுகளின் பெயர்களை 38.11 வினாடிகளில் கூறி மலேசிய சாதனை புத்தகத்தில் இடம்பிடித்துள்ளார். மேலும், ஆசியா கோட் டேலண்ட் நிகழ்ச்சியில் ஆசியாவிலேயே இளம் பங்கேற்பாளராகத் தேர்வு பெற்ற முதல் நபர் செல்வி தேவிஷா ஆவார். இத்துணைத் திறமை மிகுந்த இச்சிறுமி, உலகச் சாதனை புத்தகத்திற்காக 100 உலகத் தலைவர்களின் பெயரை 3 நிமிடங்கள் 46 வினாடிகளில் கூறி உலகச் சாதனையாளர் விருதைத் தட்டிச் சென்றுள்ளார்.

[2 *புள்ளி*]

AEB3041



Dimuat turun oleh: AEB3041 pada 7/10/2026, 9:25:48 AM

**கேள்விகள் 7 முதல் 10 வரை**

*கொடுக்கப்பட்ட உரைநடைப்பகுதியை வாசித்து, தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

இன்றைய இளைஞர்கள் புரிந்து கொள்ள முடியாத வேகத்தில் பயணிக்கும் உலகில் வாழ்ந்து வருகின்றனர். வளர்ந்து வரும் புதிய துறைகளுக்கேற்ப தகவல்களைச் சேகரிக்கவும், கற்றுக்கொள்ளவும் வேண்டிய கட்டாயம், சவால் மிக்க வாழ்க்கைச் சூழலைக் காட்டுகிறது. தேர்வு செய்வதற்கும் பணிபுரிவதற்கும் வேண்டிய தகவல்களைப் பெற இணையதளம் எனப் பல்வேறு சாதகமான அம்சங்கள் இருந்தும், இன்றைய மாணவப் பருவத்தினர் மன அழுத்தத்துக்கு உள்ளாகும் போக்கு அதிகரித்து வருகிறது.

மனநலன் தொடர்பாக வெளியாகும் ஆய்வு முடிவுகளும் புள்ளிவிவரங்களும் அதிர்ச்சி அளிக்கின்றன. 10 முதல் 20 சதவீத குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினர் மனநல பிரச்சனைகளை எதிர்கொள்கின்றனர். இவர்களில் பெரும்பாலானோர் தங்கள் பிரச்சனைகள் குறித்துப் பேசவோ, தீர்வு காணவோ யாருடைய உதவியையும் நாடுவதில்லை எனவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

அந்த நிறுவனத்தின் சமீபத்திய ஆய்வுகளின்படி, உலக அளவில் 100 கோடிக்கும் அதிகமானோர் மனநல பாதிப்புகளுடன் வாழ்கின்றனர். இதற்கு பல்வேறு காரணங்கள் இருந்தாலும், பண்பாட்டின் அடையாளமாக இருந்த கூட்டுக் குடும்ப முறை சிதைந்து போனதும் காரணமாகும். தாத்தா, பாட்டி, அத்தை, மாமா, சித்தப்பா, சித்தி என்றெல்லாம் பல்வேறு உறவுகளுடன் இருந்த குடும்பம், இன்று மூவரும், நால்வருமாக வாழும் நிலைக்கு மாறிவிட்டது.

AEB3041

பொதுவாக, மனநலப் பிரச்சனைகளால் பாதிக்கப்படுவோர்களில், 50 சதவீதம் பேருக்கு 14 வயதிலேயே அத்தகைய பாதிப்புத் தொடங்குவதாகவும், இந்த நிலை கவனிக்கப்படாமல் தொடர்ந்தால் 15 வயது முதல் 19 வயதாகும்போது அவர்களுக்குத் தற்கொலை எண்ணம் ஏற்படுவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. 13 வயது முதல் 17 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு மனநலக் கவலைகள் இருப்பதாக மனநலன் குறித்த தேசிய அளவிலான ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தேர்வுக்கும், தேர்வு முடிவுக்குமான பயம், காதல் தோல்வி போன்றவற்றால் மனக் கவலையில் மூழ்கிவிடுகின்றனர்.

உயர் கல்வி நிலையங்களில் பயிலும் இளைய தலைமுறையினரிடம்கூட மனவலிமை இல்லாத நிலை நிலவுகிறது. இதனால், சிறிய அளவிலான பிரச்சனைக்குக்கூட தீர்வு காண முடியாததுடன் எல்லாவற்றுக்கும் தற்கொலை செய்து கொள்வதே தீர்வு என்றும் எண்ணுகின்றனர். அண்மைக்காலமாக இணையதள விளையாட்டுகளின் **பிடியிலிருந்து** வெளிவர முடியாமல் மன அழுத்தத்துக்கு உள்ளாகி தற்கொலை செய்து கொள்ளும் நிலையும் உருவாகியுள்ளது.



Dimuat turun oleh: AEB3041 pada 7/10/2026, 9:25:48 AM

பொதுவாக நமது சிந்திக்கும் திறன், உணரும் திறன், செயல்படும் திறன் போன்றவை மன வலிமையுடன் இணைந்து செயல்படும் காரணிகளாக உள்ளன. மன வலிமை இருக்கும்போது விரும்பத்தகாத, சிக்கலான நிகழ்வுகளை எதிர்கொள்வதற்கும், தீர்வு காண்பதற்கும் தேவையான சக்தியை அது நமக்கு அளிக்கும்.

கவலைகள், எண்ணங்கள், நோக்கங்கள் என்பதெல்லாம் எல்லோருக்கும் பொதுவான ஒன்று. ஆனால், அதன்மேல் ஒரு பிடிப்பை உண்டாக்கிக்கொண்டு கவலையடைவதால் எந்தவொரு பயனுமில்லை. ஏனெனில், அதனால் ஏற்படும் மனநலப் பாதிப்புகளிலிருந்து வெளியேறிய சில மாதங்கள் அல்லது ஆண்டுகளுக்குப் பின்னர் அது குறித்து நினைக்கும்போது அவை தேவையற்றவை, அர்த்தமற்றவை என்கிற உண்மை தெரியவரும்.

*தமிழ் மலர்*
[எடுத்தாளப்பட்டது]

7 இளைஞர்கள் இந்நவீன உலகத்தில் சந்திக்கும் **சவால்** யாது?

[2 *புள்ளி*]

8 (அ) இளைஞர்களிடையே மனநலக் கவலைகள் ஏற்படுவதற்கான **காரணங்கள்** யாவை?

[2 *புள்ளி*]

(ஆ) மனவலிமையோடு இணைந்து பிரச்சனைக்குத் தீர்வு காண உதவும் **காரணிகள்** இரண்டனை எழுதுக.

[2 *புள்ளி*]

9 கருமையாக்கப்பட்டுள்ள சொல்லுக்குச் **சூழலுக்கு ஏற்ற பொருள்** எழுதுக.

| |
|---|
| அண்மைக்காலமாக இணையதள விளையாட்டுகளின் **பிடியிலிருந்து** வெளிவர முடியாமல் மன அழுத்தத்துக்கு உள்ளாகி தற்கொலை செய்து கொள்ளும் நிலையும் உருவாகியுள்ளது. |

[2 *புள்ளி*]

10 இளைஞரிடையே மனவலிமை உருவாக மேற்கொள்ள வேண்டிய **ஐந்து நடவடிக்கைகளை** 50 சொற்களில் ஒரு பத்தியில் எழுதுக.

[10 *புள்ளி*]



Dimuat turun oleh: AEB3041 pada 7/10/2026, 9:25:48 AM

**பிரிவு ஆ : கருத்துணர்தல் [படைப்பிலக்கியம்]**

[30 **புள்ளி**]

**கேள்விகள்** 11 **முதல்** 14 **வரை**

*கொடுக்கப்பட்டுள்ள சிறுகதைப் பகுதியை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.*

இரவெல்லாம் தூக்கமே வரவில்லை. மயான அமைதி எங்களைக் கௌவிக்கொண்டிருந்தது. எங்களையும் அறியாமல் கண்களில் நீர் சுரந்தது. நால்வரும் நான்கு மூலையில் எங்களை மறந்தவாறு அமர்ந்திருந்தோம். அவ்வப்போது விசும்பல் ஒலி மட்டுமே காதில் விழுந்தவண்ணம் இருந்தது.

நடந்ததை நினைக்கவே முடியவில்லை. இப்போது எங்களுக்கே அஃது அவ்வளவு கொடூரமாகப்படுகிறது. பாவம் முத்து; அவன் அப்பாவி. என்றும் இல்லாமல் அன்று மட்டும் எங்களுடன் இணைந்திருந்தான். அவனும் இப்போது உள்ளே வந்துவிட்டான்.

"சீக்கிரம்...சீக்கிரம் எழுந்திருங்க. போய்ப் பல்லெல்லாம் துலக்கிட்டுத் தயாராவுங்க. இன்றைக்குத் தீர்ப்பு. கோட்டுக்குப் போகணும்." மறுநாள் காலையில் போலீஸ்காரர் அதனை நினைவுபடுத்தியவுடன் நாங்கள் மறுபடியும் கலவரமடைந்தோம்.

AEB3041

போலீஸ் வண்டி புறப்பட்டது. நான் சுதந்திரமாக ஓடியாடித் திரிந்த பாதையில் இன்று கைதியாகச் செல்கிறேன். சாலையோர கடையில் நாளிதழ் வாங்கிக் கொண்டிருந்த இராமசாமி அண்ணன் போலீஸ் வண்டியைப் பார்த்ததும் பார்வையை வண்டிக்குள் ஆழப்படுத்தினார். என் பக்கத்துவீட்டுக்காரர் அவர். நான் பரிதாபமாக அவரைப் பார்த்துக் கொண்டிருப்பதை அவரும் பார்க்க தன் முகத்தை வேறு திசைக்குத் திருப்பிக் கொண்டார்.

நீதிமன்றத்தின் வளாகத்தில் வண்டி நின்றது. கண்கள் என் பெற்றோரைத் தேடின. ஒரு மூலையில் என் தம்பியோடு நின்றிருந்தார்கள். ஓடிச்சென்று அவர்களை அணைத்துக் கட்டித்தழுவ வேண்டும் போல் இருந்தது; முடியவில்லை. ஏதோ பெற்ற கடனுக்கு வந்திருக்கிறார்கள் என்பது அவர்கள் என்னைப் பார்த்தப் பார்வையிலேயே தெரிந்தது. **என் தலை தானாகப் பூமியை நோக்கியது**.

அந்தக் கிழவரின் குடும்பமும் அங்கு இருந்தார்கள். அவர்களின் எண்ணிக்கைதான் நீதிமன்றத்தில் நிறைந்திருந்தது. எங்களுக்கு என்ன தீர்ப்பு வழங்கப்பட உள்ளது என்பதை ஆர்வமாகக் கேட்கக் காத்துக்கொண்டிருந்தது அக்கூட்டம்.

"இறுதியாக ஏதேனும் கூறுகிறீர்களா?" நீதிபதி வழக்கறிஞர்களிடம் கேட்டார். 'இறுதியாக'...இச்சொல் எங்கள் **ஈரக்குலைகளை நடுங்கச் செய்தது.** கிழவரின் நினைவு



Dimuat turun oleh: AEB3041 pada 7/10/2026, 9:25:48 AM

எனக்குச் சுழன்று சுழன்று வந்து கொண்டே இருந்தது. அந்த இரவு என் வாழ்வையே மாற்றிய இரவு.

ஒழுங்காக வேலைக்குச் செல்லாமல் நாங்கள் வழக்கமாக ஊதாரித்தனம் செய்யும் தொழிற்சாலைப்பகுதி அது. கிழவன் அங்குதான் காவலாளியாகப் பணிபுரிகிறார். அன்று நாங்கள் அடித்த லூட்டியைப் பார்த்து வெறுத்துப்போன அவர் எங்களுக்கு வந்து புத்திமதி சொல்வாரா...?

அவர் பேசிக் கொண்டிருக்கும் போதே சுக்கி@சுகுமாறன் அவரைப் பார்த்து வசைபாட ஆரம்பித்துவிட்டான். மட்டு மரியாதை இல்லாமல் கொச்சை வார்த்தைகள் தெறித்தன. பதிலுக்கு அவரும் எங்களை ஏதேதோ திட்டி வார்த்தைகளைவிட ஆத்திரமடைந்த சுகுமாறன் கத்தியை எடுத்து அவரைச் சரமாரியாக வெட்டினான். ஆவேசத்தில் நானும் ரகுவும் அவனோடு சேர்ந்து கொண்டோம். கிழவர் துடிதுடித்துக் கீழே விழுந்தார்.

தீர்ப்பு வாசிக்கப்பட்டது...இதயத்தின் வலி மெல்லெழுந்தது.

"சுகுமாறன், குமரன், ரகு, முத்து ஆகிய நால்வரும் கொலை குற்றத்தில் ஈடுபட்டுள்ளது சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஈவிரக்கமின்றி காட்டுமிராண்டித்தனமாக வயதானவர் என்றும் பாராமல் மிகக் கொடூரமாக இக்கொலையைச் செய்த இந்நால்வருக்கும் இருபது வருடம் சிறைதண்டனை என இந்த நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது."

AEB3041

இருண்ட குமரனின் எதிர்காலம் கண் முன்னே நிழலாடியது...

கார்த்திகேஸ் பொன்னையா
-தண்டனை-
[சில மாற்றங்களுடன்]

11 நால்வரும் ஏன் இரவெல்லாம் தூங்க முடியாமல் தவித்தனர்?

[2 *புள்ளி*]

12 (அ) குமரனின் **பண்புநலன்களுள்** இரண்டனை அவை வெளிப்படும் **சம்பவத்தோடு** விளக்குக. [4 *புள்ளி*]

(ஆ)

| |
|---|
| **ஏதோ பெற்ற கடனுக்கு வந்திருக்கிறார்கள் என்பது அவர்கள் என்னைப் பார்த்தப் பார்வையிலேயே தெரிந்தது.** |

இக்கூற்று உணர்த்தும் **கருத்துகள்** இரண்டனை எழுதுக.

[4 *புள்ளி*]



Dimuat turun oleh: AEB3041 pada 7/10/2026, 9:25:48 AM

13 (அ) கீழ்க்காணும் சொற்றொடர்களுக்குச் **சூழலுக்கேற்ற பொருளை** எழுதுக.

i. **என் தலை தானாகப் பூமியை நோக்கியது.**

ii. **ஈரக்குலைகளை நடுங்கச் செய்தது.**

[4 *புள்ளி*]

(ஆ) கிழவரைக் கத்தியால் வெட்டியதற்கான **காரணங்கள்** யாவை?

[4 *புள்ளி*]

14 இச்சிறுகதையின்வழி பெறக்கூடிய **படிப்பினைகள்** இரண்டனை எழுதுக.

[4 *புள்ளி*]

15 கீழ்க்காணும் கவிதையிலுள்ள கருத்துகளைத் **தொகுத்து** எழுதுக.

**யார் தமிழ் படிப்பார்!**

தமிழ்மா ணவரே தமிழ்மா ணவரே
தமிழைப் படிக்கத் தயங்குகின் றீரே
தமிழைத் தமிழ்மா ணவர்படிக் காமல்
இமிழ்கடல் உலகில் எவர்படிப் பாரே!
தாய்மொழி நமக்குத் தமிழ்மொழித் தேனே
தாய்நலங் காப்பது சேய்கடன் தானே
தொடக்கப் பள்ளியில் தோளில் சுமந்ததை
இடைநிலைப் பள்ளியில் இறக்கி வைப்பதா?

- **கவிஞர் பொன்முடி**

[10 *புள்ளி*]



Dimuat turun oleh: AEB3041 pada 7/10/2026, 9:25:48 AM

**பிரிவு இ : செய்யுளும் மொழியணியும்**

[20 **புள்ளி**]

**கேள்விகள்** 16 **முதல்** 19 **வரை**

16 பின்வரும் மொழியணிகளைப் **பொருள் விளங்க வாக்கியத்தில்** அமைத்துக் காட்டுக.

| |
|---|
| **(அ) கால நேரம்** |

[2 *புள்ளி*]

| |
|---|
| **(ஆ) கொழு கொம்பற்ற கொடி போல** |

[2 *புள்ளி*]

17 ( அ) கொடுக்கப்பட்டுள்ள பொருளுக்கேற்ற **திருக்குறளை** எழுதுக.

| |
|---|
| **தமக்குத் துன்பம் செய்தவருக்கும் இன்பமே செய்யாவிடின் சான்றாண்மை என்ற பெருங்குணம் இருந்தும் பயனில்லை.** |

AEB3041

[2 *புள்ளி*]

( ஆ) கொடுக்கப்பட்டுள்ள பழமொழிக்கேற்ற **பொருளை** எழுதுக.

| |
|---|
| **அகல உழுவதினும் ஆழ உழுவது மேல்** |

[2 *புள்ளி*]

18 கோடிடப்பட்டுள்ள **செய்யுளடிகளின் பொருளை** எழுதுக.

**-----------------------------------------**
**தன்துயர் காணாத் தகைசால் பூங்கொடி;**
**<u>இன்துணை மகளிர்க்கு இன்றி யமையாக்</u>**
**<u>கற்புக் கடம்பூண்ட இத்தெய்வம் அல்லது</u>**
**<u>பொற்புடைத் தெய்வம் யாம்கண் டிலமால்!</u>**

சிலப்பதிகாரம்

[4 *புள்ளி*]



Dimuat turun oleh: AEB3041 pada 7/10/2026, 9:25:48 AM

19 கீழ்க்காணும் சூழல்களில் அடைப்புக்குள் இருக்கும் இடங்களுக்குப் **பொருத்தமான மொழியணிகளை** எழுதுக. **பத்தியை மீண்டும் எழுத வேண்டாம்.**

(அ) ஒரு வியாபாரம் சிறக்க அவ்வப்போது ஆய்வும் மேம்பாடும் மேற்கொள்ளப்பட வேண்டும். அதில் காணப்படும் குறைகளைக் களைந்து நிறைவான சேவையை வழங்கினால் வியாபாரம் முன்னேற்றம் காணும். வியாபாரத்தில் ஈடுகொடுத்து உன்னத நிலையை அடையப் பல்வேறு நுணுக்கங்களை அறிந்தவர்களாக நாம் இருக்கவேண்டும். (**I மரபுத்தொடர்**) அதற்கு கல்வி இன்றியமையாததாகும் என்பதை அறிந்து கல்வியில் சிறந்து விளங்க வேண்டும்.

(ஆ) அமுதன் மளிகைக்கடை வியாபாரத்தை மேலும் விரிவுபடுத்த வங்கியின் உதவியை நாடினார். அவருக்குக் கடன்கொடுக்க முன்வந்த வங்கி, பிணையாளரை வேண்டியது. அமுதனுக்கு உதவ வேலன் ஒப்புக்கொண்டார். சில நாள்களுக்குப் பின், அமுதனின் வியாபாரம் நன்முறையில் நடைபெறாததால் முறையாகக் கடனைத் திருப்பிச் செலுத்தவில்லை. இதனால், பிணையாளராக இருந்த வேலனைக் கடனைத் திருப்பச் செலுத்துமாறு வங்கி கோரியது. அப்பொழுதுதான் உதவி கேட்பவருக்கு உதவுவதில் தவறில்லை; அவருக்காகப் பிணையாளியாக இருக்கக்கூடாது என்று தன் தந்தை கூறியது நினைவுக்கு வந்தது. (**II பழமொழி**) வேலன் மிகவும் மனம் வருந்தினான்.

AEB3041

(இ) காலை மணி ஆறு என்பதை அறிவிப்பதுபோல நறுமுகையின் வீட்டுக் கடிகாரம் அலறியும் அவள் தாமதமாக எழுந்ததால் வீட்டு வேலைகளை அவசர அவசரமாகச் செய்ய ஆரம்பித்தாள். (**III இரட்டைக்கிளவி**) சற்று நேரத்திற்குள் பல வேலைகளைப் பம்பரமாகச் சுழன்று செய்து முடித்தாள்.

(ஈ) மாணவர்கள் கற்ற பாடங்களை நன்கு விளங்கிக்கொள்ளவும் நினைவில் வைத்துக் கொள்ளவும் பயிற்சி நூல்கள் மிக அவசியம். இத்தகைய நூல்களிலுள்ள பயிற்சிகளைச் செய்தால் மாணவர்களுக்குப் படித்த பகுதியில் தெளிவு ஏற்படும்; கற்றது மனத்தில் நிலையாக நிற்கும். (**IV உவமைத்தொடர்**) எனவே, போதிய பயிற்சி நூல்களைப் பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு வாங்கித் தர வேண்டும்

[8 *புள்ளி*]



Dimuat turun oleh: AEB3041 pada 7/10/2026, 9:25:48 AM

## பிரிவு ஈ:இலக்கணம்

[20 **புள்ளி**]

**கேள்விகள்** 20 **முதல்** 22 **வரை**

20 (அ) சொற்குவியலிலுள்ள **முற்றியலுகரச்** சொற்களை அடையாளங்கண்டு எழுதுக.

| | | |
|---|---|---|
| **குடல்** | **மாசு** | **பொது** |
| **அஞ்சு** | **விம்மு** | **கயிறு** |

[3 *புள்ளி*]

(ஆ) **சேர்த்தெழுதுக.**

(I) எ + யானை =

(II) மொழி + கற்றான் =

(III) நான்கு + நான்கு =

[3 *புள்ளி*]

(இ) **பிரித்தெழுதுக.**

AEB3041

(I) மரங்கண்டான் =

(II) சிற்றூர் =

(III) இனிக்கொடு =

[3 *புள்ளி*]

21 கீழே கொடுக்கப்பட்ட வாக்கியங்களுள் **பிறவினை வாக்கியத்தைத்** தெரிவுச் செய்க.

A அவன் தனக்குத் தெரிந்த தகவல்களைத் தெளிவாக எழுதினான்.

B அவன் தனக்குத் தெரிந்த தகவல்களைத் தெளிவாக எழுதுவித்தான்.

[1 *புள்ளி*]



Dimuat turun oleh: AEB3041 pada 7/10/2026, 9:25:48 AM

22 கீழே கொடுக்கப்பட்டுள்ள வாக்கியங்களில் **ஐந்து பிழைகளை மட்டும்** அடையாளங்கண்டு அவற்றைச் **சரிபடுத்தி எழுதுக**.
[வாக்கியங்களை மீண்டும் எழுத வேண்டாம்; நிறுத்தக்குறிகளைப் பிழையாகக் கருத வேண்டாம்]

1. பௌர்ணமி நிலவொளியில் குடும்பத்தினர் அனைவரும் மொட்டை மாடியில் அமர்ந்து நிலாசோறு சாப்பிட்டது ஒரு மறக்க முடியாத அனுபவம்.

2. இறைவனை வழிபடும் போது நெற்றியில் திருநீறு தறிப்பது இந்துக்களின் வழக்கம்.

3. அன்பினாலும் அர்ப்பணிப்பினாலும் மக்களின் இதயங்களை வென்றவரே மற்ற தலைவர்களைவிட காலத்தால் அழியாத சிறந்த தலைவராவார்.

4. தமிழர் இல்லத்துத் திருமண விழாக்களில் வருகை தரும் விருந்தினர்களை இன்முகத்தோடு வரவேற்று, விடைபெறும் போது தாம்பூலமாக வெற்றிலைப்பாக்கு வழங்கி உபசரிப்பது நம் மரபு வழிவந்த நற்பண்பாகும்.

5. துறவிகள் தங்களின் மனத்தை ஒருமுகப்படுத்த ஊண் உண்பதைத் தவிர்த்துச் சைவ உணவை மட்டுமே உட்கொள்கின்றனர்.

[10 *புள்ளி*]

**தேர்வுத்தாள் முற்றுப் பெற்றது**

**KERTAS PEPERIKSAAN TAMAT**



Dimuat turun oleh: AEB3041 pada 7/10/2026, 9:25:48 AM